# அவர் நமக்கு தீர்க்கதரிசிகளைக் கொடுத்தார்

**பாடம் 1**

அத்தியாவசிய வியாக்கியானவியல் முன்னோக்குகள்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ..... 1

நமது குழப்பம் ..... 2

குழப்பத்தின் ஆதாரங்கள் ..... 2

தீர்க்கதரிசன புத்தகங்கள் ..... 2

சபை ..... 3

குழப்பத்தின் விளைவுகள் ..... 4

பலியாளாக்குதல் ..... 4

அக்கறையின்மை ..... 5

தீர்க்கதரிசியின் அனுபவம் ..... 6

மன நிலை ..... 7

வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல் ..... 7

இயந்திர அகத்தூண்டுதல் ..... 8

இயற்கையான அகத்தூண்டுதல் ..... 8

உணர்வாற்றல் ..... 8

உண்மையான அர்த்தம் ..... 10

பிரபலமான வேத விளக்கவியல் ..... 11

அணுச்சார்ந்தவை ..... 11

வரலாறு சாராதவை ..... 11

சரியான விளக்கவியல் ..... 12

இலக்கியச் சூழல் ..... 13

வரலாற்றுப் பின்னணி ..... 13

புதிய ஏற்பாடு முன்னோக்குகள் ..... 14

வேத அதிகாரம் ..... 15

தீர்க்கதரிசன புத்தகங்கள் ..... 15

தீர்க்கதரிசன நோக்கங்கள் ..... 15

பிரயோகம் ..... 17

தீர்க்கதரிசன எதிர்பார்ப்புகள் ..... 18

தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் ..... 18

முடிவுரை ..... 20

# முன்னுரை

”ரிச்சர்ட், நீங்கள் ஒரு பெரிய சபையை ஸ்தாபிக்க விரும்பினால், நீங்கள் செய்ய வேண்டியது வேதாகம தீர்க்கதரிசன மாநாட்டை ஏற்பாடு செய்து, இயேசு விரைவில் திரும்பி வருவார் என்று அனைவருக்கும் சொல்லுங்கள்” என்று ஒரு முறை என்னிடம் ஒரு நண்பர் கூறினார். கிறிஸ்தவ புத்தகக் கடைகளையும் கிறிஸ்தவ தொலைக்காட்சியையும் பார்க்கும்போது, அவர் சொல்வது சரிதான் என்று நான் நம்புகிறேன். நிறைய பேர் தீர்க்கதரிசனத்தைப் பற்றி உற்சாகமாக இருக்கிறார்கள், ஏனென்றால் இயேசு மிக விரைவில் திரும்பி வருவார் என்று பழைய தீர்க்கதரிசிகள் கூறுகிறார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திற்கு அதிக கவனம் செலுத்துவதில்லை, ஆனால் அவர்கள் எப்போதாவது அதில் கவனம் செலுத்தும்போது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் உலகத்தின் பிற இறுதி நிகழ்வுகள் போன்ற விஷயங்களுக்கு நேராக அவர்களது மனது ஒடுகிறது. தீர்க்கதரிசன எழுத்துக்களின் ஒவ்வொரு பக்கத்திலும் இந்த கருப்பொருள்களைத் தேடுவதற்கு பல்வேறு சபை பிரிவுகளின் கிறிஸ்தவ தலைவர்கள் மக்களை ஊக்குவிக்கிறார்கள். நம் மனம் கிட்டத்தட்ட இயற்கையாகவே இந்த கருப்பொருள்களை நோக்கி ஒடினாலும், இந்த பாடங்களில் நாம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திற்கு தீர்க்கதரிசிகள் எடுத்த மிகவும் நிதானமான அணுகுமுறையை எடுக்கப் போகிறோம். நாம் அவ்வாறு செய்யும்போது, தீர்க்கதரிசிகளிடம் நாம் கற்பனை செய்யக்கூடியதை விட நிறைய, சொல்ல நிறைய இருந்தது என்பதை நாம் கண்டுபிடிப்போம்.

வேதாகம தீர்க்கதரிசனத்தை பொறுப்புடன் கையாளப் போகிறோம் என்றால் நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய மரபுவழி அல்லது விளக்கக் கருத்துகளை அடையாளம் காண்போம் என்பதால் இந்த பாடத்திற்கு ”அத்தியாவசிய வியாக்கியனவியல் முன்னோக்குகள்” என்று பெயரிட்டுள்ளோம். இந்த தொடக்க பாடம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படும், அவையாவன: பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றிய நமது குழப்பம், பின்னர் இந்த குழப்பத்தை சமாளிக்க உதவும் மூன்று தலைப்புகளைப் பார்ப்போம், அவையாவன: ஒரு தீர்க்கதரிசியினுடைய அனுபவத்தின் தன்மை, அசல் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதன் முக்கியத்துவம் மற்றும் இறுதியாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் குறித்த புதிய ஏற்பாட்டு முன்னோக்குகள். முதலில் நம் குழப்பத்தைப் பற்றிப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# நமது குழப்பம்

பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வேதத்தின் சில பகுதிகளை மற்ற பகுதிகளை விட நன்றாக அறிந்திருப்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? பழைய ஏற்பாட்டில், முதல் ஐந்து புத்தகங்களின் கதைகள் மிகவும் பரிச்சயமானவை. ஒரளவு உற்சாகமாக இருக்கிற விசுவாசிகள் யோசுவாவையும் நியாயாதிபதிகளையும் அறிவார்கள், சில விசுவாசிகள் சாமுவேல் மற்றும் ராஜாக்கள் மற்றும் நாளாகமம் போன்ற புத்தகங்களைப் பற்றி நிறைய புரிந்துகொள்கிறார்கள். ஆனால் யாராவது, ”ஏசாயா எதைப் பற்றி எழுகிறார்?” அல்லது ”அந்த செப்பனியாவைப் பற்றி என்ன தெரியும்?” ”ஆகாய் ஒரு பரபரப்பான புத்தகம் இல்லையா?” என்று யாரேனும் கேட்டுவிட்டால் இந்த புத்தகங்களைப் பற்றி நமக்கு மிகக் குறைவாகவே தெரியும் என்பதால் நாம் வாயடைத்துப் போகிறோம். போதகர்களும் பிற கிறிஸ்தவ ஆசிரியர்களும் கூட பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் பற்றிய கவனமான விளக்கங்களைத் தவிர்க்க முனைகிறார்கள், ஏனெனில் அவர்கள் வேதத்தின் இந்த பகுதியைப் பற்றி மிகவும் குழப்பமடைகிறார்கள்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் இந்த ஆய்வை நாம் தொடங்கும்போது, நமது குழப்பத்தை முதலில் பார்த்துவிட்டு தொடங்குவது முக்கியம். நாம் இரண்டு அடிப்படை கேள்விகளைக் கேட்போம், அவையாவன: நமது குழப்பத்தின் ஆதாரங்கள் என்ன மற்றும் இந்த குழப்பத்தின் சில விளைவுகள் என்ன? பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றி நம்மில் பலர் உணரும் குழப்பத்தின் மூலங்களை முதலில் பார்ப்போம்.

## குழப்பத்தின் ஆதாரங்கள்

வேதாகமத்தின் இந்தப் பகுதியில் அநேக கிறிஸ்தவர்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுவதற்கு குறைந்தபட்சம் இரண்டு விஷயங்கள் காரணமாகின்றன. முதலாவதாக, தீர்க்கதரிசன புத்தகங்கள், இரண்டாவதாக, சபையில் ஒற்றுமையின்மை.

### தீர்க்கதரிசன புத்தகங்கள்

அதை எதிர்கொள்வோம், வேதாகமத்தில் உள்ள தீர்க்கதரிசன புத்தகங்கள் அநேகமாக வேதத்தின் புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமான பகுதிகளாகும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சில தீர்க்கதரிசிகளின் பெயர்களை உச்சரிக்கக் கூட சிரமப்படுகிறார்கள், அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் புரிந்துகொள்வது அவர்களுக்கு மிகவும் கடினம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களின் புத்தகங்களின் உள்ளடக்கங்களால் நாம் அடிக்கடி குழப்பமடைகிறோம். அவைகளுக்குள் ஒற்றுமையில்லாததாகத் தெரிகிறது; ஒரு வசனத்திற்கும் அடுத்த வசனத்திற்கும் தொடர்ச்சி இருப்பதாகத் தெரியவில்லை. தீர்க்கதரிசிகள் விடுகதைகளிலும் புதிர்களிலும் பேசுவதாகத் தெரிகிறது, சில நேரங்களில் அவர்களின் வார்த்தைகள் நமக்குப் புரியவில்லை.

இது போதாது என்றால், வேதாகமத்தின் இந்த காலகட்டத்தின் வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. ராஜாக்கள், தேசங்கள், யுத்தங்கள் மற்றும் பிற நிகழ்வுகள் மிகவும் சிக்கலானவைகளாகவும் நமக்கு புரியாதவைகளாகவும் இருக்கின்றன. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் படிக்கும்போது, அவர்கள் மிகவும் விசித்திரமான, அந்நிய தேசத்திற்குள் நுழைந்ததைப் போல உணர்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் இடைவெளி இருக்கிறது. சம்பிரதாயங்கள் விசித்திரமானவைகளாக இருக்கின்றன. தீர்க்கதரிசன புத்தகங்களே முன்வைக்கும் சிரமங்களால் நாம் திகைத்து நடக்கிறோம்.

## சபை

நமது குழப்பத்திற்கான இரண்டாவது முக்கிய மூலம் சபையாகும். கிறிஸ்தவ திருச்சபையானது பல துறைகளில் கற்பிப்பதில் அற்புதமான நல்லிணக்கத்தைக் கொண்டுள்ளது. ஆனால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை விளக்கும்போது, எந்த நல்லிணக்கமும் இல்லாமல் கருத்து வேறுபாடு மட்டுமே உள்ளது. நீங்கள் யார்? ஆயிர வருட அரசாட்சிக்கு முன்பு இயேசுவின் பகிரங்க வருகை இருக்கும் என்கிற யுக கொள்கையை நீங்கள் நம்புகிறவரா? இயேசுவின் இரகசிய வருகை உபத்திரவ காலத்திற்கு முன்பா, பின்பா அல்லது இடையில் நடக்கும் என்று நம்புகிறீர்களா? இயேசுவின் பகிரங்க வருகை ஆயிர வருட அரசாட்சிக்கு பிறகு இருக்கும் என்கிற கொள்கையையா அல்லது முன்பு இருக்கும் என்கிற கொள்கையை பின்பற்றுகிறீர்களா? அல்லது நீங்கள் ஒரு ஆயிர வருட அரசாட்சியே இல்லை என்பதைக் குறித்ததான நம்பிக்கைவாதியா அல்லது அவநம்பிக்கைவாதியா? போன்ற விவாதங்களை நீங்கள் கேட்டிருக்கலாம். நாம் ஒரு பிரிவுக்குச் சென்று மற்றவர்கள் அனைவரும் தவறு என்று கேள்விப்படுகிறோம். பின்னர் நாம் மற்றொரு குழுவுக்குச் சென்று அதற்கு நேர்மாறானதைக் கேட்கிறோம். விசுவாசத்தின் அடிப்படைகளை சுவிசேஷ சபையார் ஒப்புக்கொண்டாலும், தீர்க்கதரிசனம் என்று வரும்போது நம்மிடையே எந்த உடன்பாடும் இல்லை. தீர்க்கதரிசன புத்தகங்களின் வியாக்கியானத்தைப் பற்றி திருச்சபை மிகவும் பிளவுபட்டுள்ளது, ஆகவே இந்த புத்தகங்களுக்கு நாம் மிகவும் நம்பிக்கையுடன் வருவது கடினம்.

# குழப்பத்தின் விளைவுகள்

நாம் உணரும் இந்த ஆழ்ந்த குழப்பம் சில வருந்தத்தக்க முடிவுகளுக்கு வழிவகுத்துள்ளது. வேதத்தின் இந்தப் பகுதியைப் பற்றி நாம் கொண்டிருக்கும் குழப்பத்திலிருந்து குறைந்தது இரண்டு முக்கிய விளைவுகளைப் பற்றி நான் சிந்திக்க முடியும், அவையாவன: பலியாளாக்குதல் மற்றும் அக்கறையின்மை.

## பலியாளாக்குதல்

நம்மைச் சுற்றிலும் பழிவாங்கல் நிகழ்கிறது. ”தீர்க்கதரிசன வல்லுநர்கள்” என்று அழைக்கப்படுபவர்கள் குழப்பத்திற்கு ஒழுங்கைக் கொண்டுவர எழும் அளவுக்கு கருத்து வேறுபாடும் குழப்பமும் உள்ளது. அவர்கள் முற்றிலும் உறுதியாக இருப்பதைப் போல நடித்து, தங்கள் கருத்துக்களைக் கற்பிப்பதன் மூலம் இதைச் செய்கிறார்கள்.

இது போன்ற பல பழிவாங்கல்கள் என் நினைவுக்கு வருகின்றன. சமீபத்திய தசாப்தங்களில், எண்ணற்ற புத்தகங்களும் ஆசிரியர்களும் 1948 இல் இஸ்ரவேலை நிறுவியது கிறிஸ்துவின் வருகைக்கு முந்தைய கடைசி தலைமுறையைக் குறிக்கிறது என்று கூறியுள்ளனர். கிறிஸ்து 1948 க்குப் பிறகு ஒரு நாற்பது ஆண்டு தலைமுறைக்குள் திரும்ப வேண்டும் என்று பரவலாக கற்பிக்கப்பட்டது. அதாவது ”இஸ்ரவேலுக்குப் பிறகு ஒரு தலைமுறை மட்டுமே தேசத்திற்குத் திரும்புகிறது, நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்து தனது சபைக்குத் திரும்புவார் என்று வேதம் கூறுகிறது” என்கிறார்கள்.

நாற்பது ஆண்டுகள் கடந்தும் எதுவும் நடக்கவில்லை. 1988-ம் ஆண்டு முடிந்ததவுடன் இது யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நாம் எதிர்பார்த்திருக்கலாம், ஆனால் அது நடக்கவில்லை. வருடங்கள் கடந்ததால், தீர்க்கதரிசன வல்லுநர்கள் தங்கள் கவனத்தை வேறு இடத்திற்கு திருப்பியுள்ளனர். இப்போது 2000-ம் ஆண்டு காலத்தின் இறுதிக் கட்டத்துக்கு நம்மைக் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். எதிர்பார்ப்பு மீண்டும் சூடுபிடித்துள்ளது. பத்திரிக்கைகள் மற்றும் ஊடகங்கள் கூட கடைசி காலம் வரப்போகிறது என்று நமக்குச் சொல்கின்றன; எல்லா அறிகுறிகளும் முடிவை சுட்டிக்காட்டுவதாக சொல்கின்றன. தற்போதைய ஒவ்வொரு நிகழ்வும், ஒவ்வொரு யுத்தமும், ஒவ்வொரு பூகம்பமும், ஒவ்வொரு பொருளாதார சிக்கலும், கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் நிறைவேறப் போகின்றன என்பதைக் காட்டுகின்றன என்று அவை நமக்குச் சொல்கின்றன. ”என் புத்தகங்களை வாங்கு.” ”என் ஊழியத்துக்குப் பணம் கொடு” என்பது தான் இந்த தீர்க்கதரிசன மாநாடுகளின் நோக்கமாகும். துரதிர்ஷ்டவசமாக, கிறிஸ்தவர்கள் இந்த ”வல்லுநர்கள்” என்று அழைக்கப்படுபவர்களால் எளிதில் பலியாக்கப்படுகிறார்கள். தீர்க்கதரிசன புத்தகங்களை எப்படிப் புரிந்துகொள்வது என்று தெரியாததால்தான் நம்மில்

ஆயிரக்கணக்கானோர் ஒரு விளக்கத்திலிருந்து இன்னொரு விளக்கத்திற்குத் துள்ளிக் குதிக்கிறோம்.

## அக்கறையின்மை

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றிய நமது குழப்பத்தின் ஒரு விளைவுதான் பலியாக்கப்படுதல். இன்னொரு விளைவையும் நாம் காண முடிகிறது. வேதத்தின் இந்தப் பகுதியைப் புரிந்துகொள்வதில் நாம் பல நேரங்களில் அலட்சியமாக இருக்கிறோம். பல கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனத்தை அணுகுவதில் பல கட்டங்களைக் கடந்து வருவதாகத் தெரிகிறது. முதலில் மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பிப்பார்கள். யாராவது கற்பிப்பதைக் கேட்கிறார்கள், கூட்டங்களுக்குச் செல்வதிலும் தீர்க்கதரிசிகளைப் பற்றிய புத்தகங்களைப் படிப்பதிலும் அவர்கள் மிகுந்த உற்சாகத்தைக் காண்கிறார்கள். ஆனால் உங்களுக்குத் தெரிந்த அடுத்த விஷயம் என்னவென்றால், இந்த விசுவாசிகள் தங்களை நெருக்கடியில் ஆழ்த்துகிறார்கள், ஏனென்றால் அவர்களின் ஆசிரியர்கள் உண்மையல்லாத விஷயங்களை அவர்களிடம் கூறியுள்ளனர். பல சந்தர்ப்பங்களில், இதே கிறிஸ்தவர்கள் பெரும் அக்கறையில்லாமல் போய் விடுகிறார்கள். வேதத்தின் இந்தப் பகுதியைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதை அவர்கள் கைவிடுகிறார்கள்.

நான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது எனக்கு இதுதான் நடந்தது. நான் ஒரு புத்தம் புதிய கிறிஸ்தவனாக இருந்தேன், ”ரிச்சர்ட், இயேசு விரைவில் திரும்பி வருகிறார்” என்று என் ஆசிரியர்கள் அனைவரும் என்னிடம் சொன்னார்கள். அதனால், கல்லூரிக்குச் செல்லும் எண்ணத்தைக் கூடக் கைவிட்டேன். மகிழ்ச்சியாக, அவர்கள் சொல்வது தவறு என்பதை நான் மிக விரைவாகக் கண்டுபிடித்தேன், மேலும் நான் எனக்காக ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டேன். ஆனால் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றி நான் மிகவும் வெறுப்படைந்தவனாக ஆனேன். ”வேதத்தின் இந்தப் பகுதியை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை” நான் புரிந்து கொள்ளக்கூடிய பிற பகுதிகளை நான் கையாள வேண்டும்” என்று நான் நினைத்துக் கொண்டேன். நான் எங்கு சென்றாலும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றி அக்கறையற்ற கிறிஸ்தவர்களைக் காண்கிறேன் என்று நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றி இன்று பல விசுவாசிகள் அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள் என்று நான் பயப்படுகிறேன். அவர்கள் வேதத்தின் இந்த பகுதியைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதைக் கைவிடுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் ஏமாற்றத்தால் சோர்வடைகிறார்கள், மேலும் அவர்கள் பாதிக்கப்பட்டதில் சோர்வடைகிறார்கள். ”தீர்க்கதரிசனத்தைப் பற்றி கவலைப்படாதே” என்று எத்தனை போதகர்கள் சொல்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன் என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

என்னால் சொல்ல முடியாது. ”எப்படியும் உனக்குப் புரியாது” என்று சொல்வார்கள். எனவே, வேதத்தின் இந்த பகுதியை நாம் மறந்து விடுகிறோம்.

சரி, இந்த நிலைமையை மாற்ற வேண்டிய நேரம் இது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும், அப்போதுதான் நாம் ”பலவிதமான தவறான போதனைகளுக்கு” பலியாக மாட்டோம். ஆனால் நாம் தீர்க்கதரிசனத்தைப் பற்றியும் கற்றுக்கொள்ள வேண்டும், இதனால் அக்கறையின்மையைத் தவிர்க்கலாம். நாம் புறக்கணிப்பதற்காக தேவன் தீர்க்கதரிசனத்தை வேதத்தில் தரவில்லை. எண்ணற்ற வழிகளில் நாம் பயனடையவும், தீர்க்கதரிசனத்தைப் பற்றி அறியாமலோ அல்லது குழப்பமாகவோ இருப்பதில் நாம் திருப்தியடையக்கூடாது என்பதற்காக அவர் வேதாகமத்தின் இந்த பகுதியை நமக்குக் கொடுத்தார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் இருக்கிற இந்த சிக்கல்களை நாம் அனைவரும் அங்கீகரிக்கிறோம் என்று நான் நினைக்கிறேன், ஆனால் இப்போது நாம் மற்றொரு கேள்வியைக் கேட்க வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைப் பற்றிய நமது அறிவையும் புரிதலையும் அதிகரிப்பதற்காக, இந்த சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு நாம் என்ன வகையான விஷயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்? பலியாக்கப்படுதல் மற்றும் அக்கறையின்மையைத் தவிர்ப்பதற்கு குறைந்தபட்சம் மூன்று முக்கிய தலைப்புகளை நாம் ஆராய வேண்டும். ஒரு தீர்க்கதரிசியின் அனுபவத்தின் தன்மையைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும், மேலும் தீர்க்கதரிசனங்களின் அசல் அர்த்தத்தின் முக்கியத்துவத்தையும் நாம் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை புதிய ஏற்பாடு எவ்வாறு கையாண்டது என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த மூன்று தலைப்புகளும் மிகவும் முக்கியமானவை, இந்த பாடங்கள் முழுவதும் அவற்றைக் கையாளுவோம். இந்த நேரத்தில், நாம் சில ஆரம்ப சிந்தனைகளை அறிமுகப்படுத்துவோம்.

# தீர்க்கதரிசியின் அனுபவம்

முதலில் ஒரு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியின் அனுபவத்தைப் பார்ப்போம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை இன்னும் பொறுப்புடன் கையாள வேண்டும் என்று நாம் எப்போதாவது நம்பினால், தீர்க்கதரிசிகளின் அனுபவத்தை நாம் கவனமாகப் பார்க்க வேண்டும். தேவனிடமிருந்து வந்த இந்த தீர்க்கதரிசிகளுக்கு என்ன நடந்தது? தேவனுடைய வார்த்தையை அறிவித்தபோது அவர்கள் என்ன அனுபவித்தார்கள்? தீர்க்கதரிசிகளைப் பற்றி மக்கள் பேசுவதை நான் படித்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன், அவர்களின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனுபவங்களைப் பற்றி குறைந்தது மூன்று தவறான கருத்துக்கள் முன்னுக்கு வந்துள்ளன. பல கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசிகளின் மனநிலையை தவறாக புரிந்துகொள்கிறார்கள். தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை தேவன் தூண்டிய வழிகளையும் நாம் தவறாகப் புரிந்துகொள்கிறோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் புரிதல், அவர்களின் வார்த்தைகளைப் பற்றி அவர்கள் புரிந்துகொண்டது பற்றி நமக்கு பெரும்பாலும் சரியான யோசனை இல்லை.

## மன நிலை

முதலாவதாக, தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனங்களைப் பெற்றபோது உணர்வில்லாதிருந்தார்கள் என்கிற ரீதியில் வேதாகமத்தின் பல மாணவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஆவியினால் மிகவும் பரவசமடைந்து, தங்கள் புலன்களை இழந்தார்கள். அவர்கள் கானானிய பாகால் தீர்க்கதரிசிகளையும் பண்டைய மற்றும் நவீன உலகின் பிற மதங்களையும் போலவே பரபரப்பான மயக்க நிலைக்குச் சென்றனர் என்று நினைக்கிறார்கள்.

தீர்க்கதரிசிகளைப் பற்றிய இந்தக் கண்ணோட்டம் இப்போது பரவலாக இருந்தாலும், அது வேதாகமத்தின் சான்றுகளுடன் பொருந்தவில்லை. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தேவனிடமிருந்து கண்டதையும் கேட்டதையும் கண்டு வியந்த காலங்கள் இருந்தன என்பதை நாம் உறுதியாக நம்பலாம் என்று நான் நினைக்கிறேன். எட்டாம் அதிகாரத்தில், தேவ ஆவியானவர் எசேக்கியேலை அவரது தலைமுடியைப் பிடித்து பாபிலோனிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் எருசலேமில் உள்ள ஆலயத்திற்கு அழைத்துச் சென்றபோது எசேக்கியேல் எப்படிப்பட்ட மனநிலையில் இருந்திருப்பார் என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். ஆனால் இந்த நிலையிலும் எசேக்கியேல் இதை தாமாக செய்யவில்லை. அவர் மனம் தளரவில்லை. மாறாக, எசேக்கியேல் புத்தகத்தின் இந்தப் பகுதியை நாம் படிக்கும்போது, அவர் தேவனுடன் நியாயமாக தொடர்பு கொள்ள முடிந்தது என்பதைக் காண்கிறோம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் வியத்தகு சூழ்நிலைகளில் கூட, தேவன் தம்முடைய வார்த்தையை அவர்களுக்கு வெளிப்படுத்தியபோது விழிப்புடன் இருந்தார்கள்.

## வேதம் தேவ ஆவியினால் அருளப்படுதல்

தீர்க்கதரிசியின் அனுபவத்தைப் பற்றிய இரண்டாவது பரவலான தவறான கருத்து அவர்கள் தேவனால் ஏவப்பட்ட வழிகளுடன் தொடர்புடையது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## இயந்திர அகத்தூண்டுதல்

துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை இயந்திரத்தனமாக ஏவப்பட்டவர்கள் போல அணுகுகிறார்கள். தீர்க்கதரிசிகளை வெறும் கட்டளை இயந்திரங்கள் போல நடத்துகிறோம். ஏசாயா பேசியபோது, தேவன் அவருடைய உதடுகளை அசைக்க அனுமதித்தார். ஆமோஸ் பிரசங்கித்தபோது, தேவன் ஒவ்வொரு வார்த்தையையும் அவருடைய வாயில் திணித்தார். வேதத்தின் மற்ற பகுதிகளைப் பற்றி இப்படி சிந்திப்பதை விட நமக்கு நன்றாகத் தெரியும், ஆனால் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் பொறுத்தவரை, அவர்கள் வெளிப்பாட்டின் செயலற்ற கருவிகளாகவும் தேவனுடைய இயந்திர ஊதுகுழல்களைப் போலவும் அடிக்கடி நடத்துகிறோம்.

## இயற்கையான அகத்தூண்டுதல்

அகத்தூண்டுதலைப் பார்க்கும் இந்த பிரபலமான வழிக்கு மாறாக, இந்த பாடங்களில் நாம் ”இயற்கையான அகத்தூண்டுதல்” என்ற கண்ணோட்டத்துடன் செயல்படுவோம். பரிசுத்த ஆவியானவர் தீர்க்கதரிசன எழுத்துக்களை ஏவினார் என்று நாம் நம்புகிறோம், இதனால் அவை பிழைகள் இல்லாமல் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில், தேவன் வேதாகமத்தை எழுத தூண்டியபோது, மனித எழுத்தாளர்களின் ஆளுமைகளையும் சிந்தனைகளையும் கண்ணோட்டங்களையும் பயன்படுத்தினார் என்பதை நாம் அறிவோம். புதிய ஏற்பாட்டில் இது உண்மை என்று நமக்குத் தெரியும். பவுலின் நிருபங்கள் அவருடைய ஆளுமையையும் அவரது பின்னணியையும் பிரதிபலிக்கின்றன. நான்கு சுவிசேஷங்களுக்கு இடையிலான வேறுபாடுகள் முதன்மையாக மனித எழுத்தாளர்களின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களில் உள்ள வேறுபாடுகளால் ஏற்படுகின்றன என்பதையும் நாம் அங்கீகரிக்கிறோம். தீர்க்கதரிசிகளின் ஆளுமைகளையும், அனுபவங்களையும், நோக்கங்களையும் தேவன் அவர்களுக்கு ஏவித்ததைப் போலவே பயன்படுத்தினார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொள்ள விரும்பினால், அவர்களுடைய அனுபவத்தைப் பற்றிய இயந்திரத்தனமான புரிதலை நாம் நிராகரித்து, தேவன் அவர்களை முழுமையாக, சிந்திக்கும் மனிதர்களாக ஏவிய வழிகளைத் தேடத் தொடங்க வேண்டும்.

# உணர்வாற்றல்

தீர்க்கதரிசிகளின் அனுபவங்களைப் பற்றிய நமது பிற தவறான கருத்துகளுக்கு ஏற்ப, தீர்க்கதரிசிகள் அவர்களின் வார்த்தைகளை எவ்வளவு புரிந்துகொண்டார்கள் என்பதைப் பற்றிய நல்ல யோசனை பெரும்பாலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நம்மிடம் இல்லை. உண்மையில், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசிகள் அறியாமையில் இருப்பது போல அல்லது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாதது போல நடந்துகொள்கிறார்கள். உதாரணமாக, யாராவது ஆமோஸைத் தடுத்து, ”நீங்கள் சொல்வதன் மூலம் என்ன சொல்கிறீர்கள்?” என்று கேட்டிருந்தால், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ”நான் என்ன சொல்கிறேன் என்று தெரியவில்லை; தேவன் சொல்வதைத்தான் சொல்கிறேன்” என்று ஆமோஸ் இவ்வாறு பதிலளித்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

சரி, இந்த தவறான கருத்துக்கு மாறாக, தீர்க்கதரிசிகளுக்கு புரிதல் இருந்தது என்று வேதம் போதிக்கிறது. அவர்கள் சொன்னதில் பல விஷயங்கள் புரிந்தன. உதாரணமாக,

> நான் அதைக் கேட்டதும் அதன் பொருளை அறியவில்லை (தானியேல் 12:8).

ஆனால் தானியேல் எதைக் குறிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். கர்த்தரிடம் தொடர்ந்து பேசிக்கொண்டே அவர் இவ்வாறு விளக்கினார்.

> என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும்? (தானியேல் 12:8).

தானியேல் தாம் கேட்டதையும் எழுதியதையும் புரிந்துகொண்டார்; அவருக்கு சொற்களஞ்சியம் தெரியும்; அவருக்கு இலக்கணம் தெரியும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அது அவரது வார்த்தைகளாக இருந்தன. ஆனால், அவருக்கு எல்லாம் புரியவில்லை. தீர்க்கதரிசனம் எவ்வாறு நிறைவேறும் என்று சரியாகத் தெரியாது என்று அவர் ஒப்புக்கொண்டார்.

அதுபோலவே, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் புரிந்துகொண்டார்கள், ஆனால் அவர்கள் சொன்ன அனைத்தையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று 1 பேதுரு 1:11 நமக்குச் சொல்கிறது. அங்கே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் பின்வருமாறு முயற்சித்தார்கள் என்று பேதுரு கூறுகிறார்,

> ....இன்ன காலத்தை குறித்தார் என்பதையும் அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள் (1 பேதுரு 1:11).

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் நேரம் மற்றும் சூழ்நிலைகளின் விவரங்களை அறியாமல் இருந்தனர் என்று பேதுரு கூறினார், ஆனால் அவர்கள் தங்கள் வார்த்தைகளை முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்று அவர் ஒரு கணம் கூட கூறவில்லை. மாறாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தீர்க்கதரிசிகள் மிகவும் அறிந்திருந்தார்கள், மேலும் அவர்கள் சொல்வதில் பலவற்றைப் புரிந்துகொண்டார்கள் என்பதை நாம் காண்போம். அறியாமையில் இருப்பதற்குப் பதிலாக, அவர்கள் தேவனுடைய வழிகளைப் பற்றிய மகத்தான நுண்ணறிவுகளைக் கொண்டிருந்தனர்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அனுபவத்தைப் பற்றி பல தவறான கருத்துக்கள் உள்ளன, மேலும் நாம் அவர்களின் மனநிலை, ஆவியினால் நிகழ்ந்த அகத்தூண்டுதல் மற்றும் அவர்களின் தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்வது ஆகிய மூன்றை மட்டுமே தொட்டுள்ளோம். தீர்க்கதரிசனத்தை நாம் எப்போதாவது சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்றால், அவர்கள் மனதளவில் விழிப்புடன் இருந்தார்கள் என்றும் அவர்கள் இயற்கையாகவே தூண்டுதல் பெற்றவர்கள் என்றும், அவர்கள் சொல்ல வேண்டியவற்றில் பெரும்பகுதியை அவர்கள் புரிந்துகொண்டார்கள் என்பதையும் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இவற்றை நாம் நினைவில் வைத்திருந்தால், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை விளக்குவதில் நாம் வெகுதூரம் செல்லலாம்.

ஒரு தீர்க்கதரிசியின் அனுபவத்தை நோக்கிய இந்த நோக்குநிலையை மனதில் கொண்டு, நாம் இப்போது ஒரு தீர்க்கதரிசனத்தின் அசல் அர்த்தத்தின் முக்கியத்துவம் என்கிற இரண்டாவது இன்றியமையாத வியாக்கியான கண்ணோட்டத்திற்கு திரும்பலாம்.

# உண்மையான அர்த்தம்

சீர்திருத்த காலத்திலிருந்தே, சுவிசேஷகர்கள் ஒரு வேத பகுதியின் அசல் பொருளை முதலில் கண்டுபிடித்து, பின்னர் அந்த மூல அர்த்தத்தின் அதிகாரத்திற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று எப்போதும் நம்புகிறார்கள். வேதத்தின் மற்ற பகுதிகளுக்கு வரும்போது, அதைச் செய்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம், ஆனால் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்துடன், இந்த அடிப்படை வியாக்கியான கொள்கையை மறந்துவிடுகிறோம். இதை நாம் எவ்வாறு செய்கிறோம் என்பதை ஆராய்வதற்கு, நாம் பின்வரும் இரண்டு வெவ்வேறு விஷயங்களைப் பார்க்க வேண்டும், அவையாவன: முதலாவதாக, விளக்கவுரைக்கான பிரபலமான அணுகுமுறைகள், பின்னர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் விளக்கவுரைக்கான சரியான அணுகுமுறை. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் மூல அர்த்தத்திற்கான மிகவும் பரவலான, பிரபலமான அணுகுமுறைகளை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# பிரபலமான வேத விளக்கவியல்

இன்று நீங்கள் எங்கு திரும்பினாலும், நல்ல அர்த்தமுள்ள கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசன புத்தகங்களுடைய அசல் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதில் மிகக் குறைந்த கவனத்துடன் இருக்கிறார்கள். இந்த பிரபலமான அணுகுமுறைகள் குறைந்தது இரண்டு வழிகளில் வகைப்படுத்தப்படலாம், அவையாவன: அவை அணுவியல், மற்றும் அவை வரலாற்றுக்கு அப்பாற்பட்டவை.

## அணுச்சார்ந்தவை

பிரபலமான விளக்கவியல் அணுவியல் என்று நாம் சொல்லும்போது நாம் எதைக் குறிக்கிறோம்? கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசன புத்தகங்களை தளர்வாக இணைக்கப்பட்ட கணிப்புகளின் தொகுப்புகளாகப் படிப்பது மிகவும் பொதுவானது. ஒரு தீர்க்கதரிசன புத்தகத்தின் பெரிய பகுதிகளை கவனமாகப் படிப்பதற்குப் பதிலாக, ஒரு கவனத்தை ஈர்க்கும் சொற்றொடர் அல்லது சில சிறப்பு வார்த்தைகளில் கவனம் செலுத்துவதில் நாம் பொதுவாக திருப்தியடைகிறோம். சில நேரங்களில், ஒரு சில வசனங்கள் பரிசீலனைக்கு வருகின்றன, ஆனால் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களைப் படிக்கும்போது பெரும்பாலான கிறிஸ்தவர்கள் கருதும் ஒரு பெரிய சூழல் இது. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திற்கு அணுவியல் அணுகுமுறை ஒத்து வராது.

## வரலாறு சாராதவை

வருத்தமான விஷயம் என்னவென்றால், பெரும்பாலான சுவிசேஷகர்களும் தீர்க்கதரிசிகளின் வரலாற்றுப் பின்னணியைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவர்கள் மனித எழுத்தாளரில் கவனம் செலுத்துவதில்லை, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் அசல் வாசகர்களின் சூழ்நிலைகளையும் தேவைகளையும் அவர்கள் கருத்தில் கொள்வதில்லை.

மாறாக, தீர்க்கதரிசனங்கள் அர்த்தத்தால் நிரப்பப்படுவதற்காக காத்திருக்கும் வெற்று டப்பாக்கள் போல நடத்தப்படுகின்றன. இந்த டப்பாக்களை நிரப்பும் அசல் அர்த்தத்தை நாம் ஏற்கனவே கண்டுபிடிக்கவில்லை. அதற்குப் பதிலாக, நம் நாளின் நிகழ்வுகளைப் பார்ப்பதன் மூலம் நம் சொந்த அர்த்தத்தை வழங்குகிறோம். நம் உலகில் என்ன நடக்கிறது என்பதைப் பார்த்து, தீர்க்கதரிசனத்தின் வெற்று டப்பாக்களை தற்போதைய, வரலாற்று நிகழ்வுகளால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

ஐரோப்பாவில் உள்ள ஒரு அற்புதமான சபையில் கற்பித்தது எனக்கு நினைவிருக்கிறது, கேள்வி பதில் நேரத்தில், அறையின் பின்புறத்தில் இருந்த ஒருவர் கையை உயர்த்தி, ”செர்னோபிலில் நடந்த பேரழிவானது காலத்தின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முடிவின் அடையாளம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். நான் என் மொழிபெயர்ப்பாளரைப் பார்த்து, "அவர் உண்மையிலேயே அப்படிச் சொன்னாரா?" என்று கேட்டேன். "நிச்சயமாக" என்று மொழிபெயர்ப்பாளர் சொன்னார், ஏனென்றால் இந்த மனிதனின் மொழியில் "செர்னோபில்" என்ற வார்த்தைக்கு "எட்டி" என்று பொருள், எரேமியா 23 இல், "எட்டி" என்ற சொல் பயன்படுத்தப்பட்டு காலத்தின் முடிவுடன் தொடர்புடையது. சரி, இவர் என்ன செய்தார்? அவர் வேதத்தில் ஒரு வார்த்தையைக் கண்டுபிடித்தார், அதை அவர் தனது அனுபவத்தில் ஏதோவொன்றுடன் தொடர்புபடுத்தியிருந்தார், இதன் விளைவாக அவர் காலத்தின் முடிவின் அடையாளத்தைக் கண்டார். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வரலாற்றுப் பின்னணியைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் வேதத்தில் நம் சொந்தக் கருத்துக்களைப் படிக்கும்போது அதைத் தவிர நாம் என்ன செய்ய வேண்டும்?

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தில் நமது சொந்த அர்த்தத்தை திணிப்பது பரவலாக உள்ளது, ஏனென்றால் நம்மில் பலர் இந்த நூல்களை அணுவியல் ரீதியாகவும், எழுத்தாளர் மற்றும் வாசகர்களின் வரலாற்றுப் பின்னணியைப் பற்றி கவலைப்படாமலும் படிக்கிறோம். மூல அர்த்தம் புறக்கணிக்கப்படும்போது, இந்த வேதாகமங்களில் நம்முடைய சொந்த கருத்துக்களைப் படிப்பதைத் தவிர வேறு எதையும் நம்மால் செய்ய முடியாது.

## சரியான விளக்கவியல்

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திற்கான பிரபலமான அணுகுமுறைகளை சரிசெய்வதற்கான ஒரே வழி, இந்த நூல்களின் அசல் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க சரியான அக்கறையை வளர்ப்பதாகும். பல விஷயங்களில், வேதத்தின் மற்ற பகுதிகளில் நாம் பயன்படுத்தும் விளக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பயன்படுத்துவது மட்டுமே நாம் செய்ய வேண்டியதாகும். தீர்க்கதரிசனத்தின் அசல் அர்த்தத்தை இலக்கண-வரலாற்று விளக்கங்கள் மூலம் கண்டுபிடிக்க வேண்டும். தீர்க்கதரிசன புத்தகங்களில் நம்முடைய சொந்த அர்த்தங்களை ஊற்றுவதைத் தடுக்கும் ஒரே நங்கூரம் இதுதான்.

"இலக்கண-வரலாற்று" என்ற சொல் குறிப்பிடுவது போல, மூல அர்த்தத்தைக் கண்டுபிடிக்க நாம் இரண்டு கூறுகளில் கவனம் செலுத்த வேண்டும். முதலில், நாம் ஒரு தீர்க்கதரிசனத்தின் இலக்கணத்தைப் பார்க்க வேண்டும், இலக்கிய சூழலில் கவனம் செலுத்துவதன் மூலம் இதைச் செய்கிறோம். இரண்டாவதாக, மூல எழுத்தாளன் மற்றும் அசல் வாசகர்களின் வரலாற்றுப் பின்னணியைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## இலக்கியச் சூழல்

இந்த பாடங்களில் நாம் காண்பது போல, பிரபலமான அணுவியல் அணுகுமுறைகள் செய்வது போல, அங்கும் இங்கும் ஒன்றிரண்டு வார்த்தைகளில் கவனம் செலுத்துவது மட்டும் போதாது. பெரிய பிரிவுகள், வசனங்கள் மற்றும் அத்தியாயங்கள், புத்தகங்களின் பிரிவுகள், தீர்க்கதரிசன புத்தகங்கள் முழுவதையும் எவ்வாறு கையாள்வது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக, ஏசாயா 7:14- இன் புகழ்பெற்ற தீர்க்கதரிசனத்தில் நாம் ஆர்வமாக இருக்கலாம்:

> ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் (ஏசாயா 7:14).

"கன்னிகை" மற்றும் "குமாரன்" என்ற சில முக்கிய வார்த்தைகளைக் கவனிப்பதில் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் திருப்தியடைகிறார்கள், அவர்கள் அவ்வாறு செய்யும்போது, இந்த பத்தியின் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்துகொண்டதாக அவர்கள் மிகவும் வசதியாக உணர்கிறார்கள்.

ஏசாயா 7:14-ன் இந்த அணுகுமுறையில் நாம் எவ்வளவு வசதியாக இருக்கிறோமோ, அதே அளவுக்கு இந்தப் பத்திக்கு பொறுப்பாக இருப்பதற்கு, இந்த சில முக்கிய வார்த்தைகளுக்கு அப்பால் சென்று முழு சூழலையும் பரிசீலிக்க வேண்டும். ஏசாயா 7- க்குள் இந்த வசனம் எப்படி பொருந்துகிறது? அது ஏசாயா புஸ்தகத்தின் இந்தப் பகுதிக்குள் எப்படிப் பொருந்துகிறது? ஏசாயா புஸ்தகத்தின் முழு நோக்கத்திற்கும் அர்த்தத்திற்கும் அது எவ்வாறு பங்களிக்கிறது? இந்த ஒரு வசனத்தை அதன் பரந்த சூழலில் அமைக்கும்போதுதான் நாம் அதை சரியாகப் புரிந்துகொண்டோம் என்பதை உறுதியாக நம்ப முடியும்.

## வரலாற்றுப் பின்னணி

ஒரு தீர்க்கதரிசனத்தின் பெரிய இலக்கியச் சூழலைப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல், சரியான விளக்கங்களில் தீர்க்கதரிசனங்களை அவற்றின் வரலாற்றுப் பின்னணியில் படிப்பதும் அடங்கும். எழுத்தாளரைப் பற்றியும் வாசகர்களைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தீர்க்கதரிசனங்களைப் படிக்கும்போது, இந்த வேதாகமங்கள் காலத்தால் அழியாத இடத்தில் மிதப்பது போல செயல்படுகிறார்கள். ஆனால் இலக்கண-வரலாற்று விளக்கவுரைகள் இந்த தீர்க்கதரிசனங்களை மீண்டும் பூமியில் வைக்க வேண்டும். பின்வருவன போன்ற கேள்விகளை நாம் கேட்க வேண்டும்: இந்த வார்த்தைகளை எழுதியது யார்? அவை எப்போது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எழுதப்பட்டன? அவர் யாருக்கு எழுதிக் கொண்டிருந்தார்? இந்த வார்த்தைகள் ஏன் எழுதப்பட்டன?

எடுத்துக்காட்டாக, ஏசாயா 7:14-ஐ அணுகும்போது, இயேசு பிறந்தபோது தரையைத் தொடுவதற்காகக் காத்திருந்து பரலோகத்தில் மிதக்கிற வெறும் வார்த்தைகளின் தொகுதியாக இதை நாம் நினைக்கக்கூடாது. இந்த வசனத்தை நாம் பூமிக்கு கொண்டு வர வேண்டும். யூதாவின் ராஜாவாகிய ஆகாஸிடம் ஏசாயா பேசியதை விவரிக்கும் ஒரு வசனத்தை நாம் படிக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது போன்ற கேள்விகளை நாம் கேட்க வேண்டும்: ஏசாயா ஏன் இந்த வார்த்தைகளை ஆகாஸிடம் சொன்னார்? அவர்களின் வரலாற்றுச் சூழல் என்ன? அதன் நோக்கம் என்ன? இந்த வரலாற்றுப் பின்னணியைக் கவனிப்பதன் மூலமே இந்தப் பகுதியைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என்று நம்பலாம்.

எனவே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களுக்கான அணுவாத மற்றும் வரலாற்றுக்கு புறம்பான பொதுவான அணுகுமுறைகளை நாம் நிராகரிக்க வேண்டும், அதற்கு பதிலாக இலக்கண-வரலாற்று விளக்கங்கள் மூலம் மூல அர்த்தத்தைக் கண்டுபிடிக்க நாம் கடினமாக உழைக்க வேண்டும். ஒரு தீர்க்கதரிசனத்தின் அசல் அர்த்தத்தை நாம் புரிந்துகொண்டவுடன், இன்று தீர்க்கதரிசனத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்ள உதவும் ஒரு பாதுகாப்பான நங்கூரம் நம்மிடம் உள்ளது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன புத்தகங்களைப் பற்றிய நமது குழப்பத்தைப் போக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டு பகுதிகளை இதுவரை பார்த்தோம், அவையாவன: தீர்க்கதரிசியின் அனுபவம் மற்றும் மூல அர்த்தத்தின் முக்கியத்துவம். இப்போது நாம் கவனமாக கவனம் செலுத்த வேண்டிய தீர்க்கதரிசனம் குறித்த புதிய ஏற்பாட்டு முன்னோக்குகள் என்கிற மூன்றாவது பகுதிக்கு திரும்ப வேண்டும்.

# புதிய ஏற்பாடு முன்னோக்குகள்

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் பற்றிய புதிய ஏற்பாட்டின் கண்ணோட்டங்களை நாம் கருத்தில் கொள்ளும்போது, பல பிரச்சனைகள் முன்னணிக்கு வருகின்றன. பின்வரும் பாடங்களில் இந்த விஷயத்திற்குத் திரும்புவோம், ஆனால் இந்த கட்டத்தில் புதிய ஏற்பாட்டு முன்னோக்குகளின் இரண்டு பரிமாணங்களைக் கையாள்வது உதவியாக இருக்கும், அவையாவன: முதலாவது, தீர்க்கதரிசிகளின் அதிகாரம் குறித்த புதிய ஏற்பாட்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கண்ணோட்டம்; இரண்டாவதாக, புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பயன்படுத்திய வழிகள்.

# வேத அதிகாரம்

இயேசுவும் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அதிகாரத்தை முழுமையாக நம்புவதாக அடிக்கடி காட்டினர். அவர்கள் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களை அதிகாரப்பூர்வமானவை என்று முறையிட்டனர், மேலும் அவர்கள் தீர்க்கதரிசிகளின் நோக்கங்களையும் அதிகாரப்பூர்வமானவை என்றும் முறையிட்டனர்.

## தீர்க்கதரிசன புத்தகங்கள்

முதலாவதாக, இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளின் பரிசுத்த வேதாகமங்களுக்குக் கீழ்ப்படிவதை உறுதிப்படுத்தினர். இயேசு தனது காலத்தில் வேதாகம யூத மதத்தின் போதனைகளுக்கு உண்மையாக இருந்தார் என்பதைச் சொல்லத் தேவையில்லை. நிச்சயமாக, அந்த நேரத்தில் யூத மதத்தின் மைய போதனைகளில் ஒன்று எபிரெய வேதாகமத்தின் முழுமையான அதிகாரமாக இருந்தது, அதனால்தான் இயேசு தனது ஊழியம் பழைய ஏற்பாட்டின் பரிசுத்த வேதாகமங்களுக்கு ஏற்ப இருந்தது என்பதை அடிக்கடி உறுதிப்படுத்தினார். உதாரணமாக, மத்தேயு 5:17-ல் இயேசு இவ்வாறு கூறுகிறார்:

> நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள் (மததேயு 5:17).

மோசேயின் அதிகாரத்தை மட்டும் அங்கீகரித்ததாக இயேசு வெறுமனே சொல்லவில்லை, ஆனால் தீர்க்கதரிசன எழுத்துக்களின் அதிகாரத்தையும் அவர் அங்கீகரித்தார் என்பதை இங்கே கவனியுங்கள். புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் அனைவரும் கிறிஸ்துவைப் பின்பற்றினர். அவர்கள் தீர்க்கதரிசன புத்தகங்களை அதிகாரப்பூர்வ வேதாகமங்கள் என்று தொடர்ந்து குறிப்பிட்டனர்.

## தீர்க்கதரிசன நோக்கங்கள்

இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளின் பரிசுத்த நூல்களை நேசித்தார்கள் என்பதைப் பார்ப்பது எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு அவர்கள் தீர்க்கதரிசிகளின் அசல் நோக்கங்களுக்கும் கட்டுப்பட்டவர்கள் என்பதை நாம் உணர வேண்டியது முக்கியம். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தீர்க்கதரிசனத்தைப் புரிந்துகொள்ளும் வழிகளில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தன்னிச்சையாக இருக்கவில்லை. அவர்கள் தங்கள் சொந்த அர்த்தங்களை தீர்க்கதரிசன புத்தகங்கள் மீது திணிக்கவில்லை. மாறாக, ஒரு தீர்க்கதரிசனத்தின் அசல் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதிலும், பின்னர் அந்த உறுதியான அடித்தளத்தைக் கட்டமைப்பதிலும் அவர்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தனர்.

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டை எப்படி வேண்டுமானாலும் விளக்குவதற்கு தேவனால் கொடுக்கப்பட்ட உரிமை உண்டு என்று மக்கள் நினைப்பது இன்று மிகவும் பிரபலமாக உள்ளது. ஆனால் உண்மைக்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் அசல் அர்த்தத்தில் மிகவும் அக்கறை கொண்டிருந்தனர் என்பதை புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டு பகுதிகள் காண்பிக்கும்.

அப்போஸ்தலர் 2:29-31-ல் பேதுரு தன்னை விளக்கும் வழிகளில் தீர்க்கதரிசிகளின் நோக்கங்களுக்கான இந்த ஆழமான அர்ப்பணிப்பை நாம் காணலாம். சங்கீதம் 16-ன் ஒரு பகுதியை மேற்கோள் காட்டிய பிறகு, பேதுரு 29-வது வசனத்தில் இவ்வாறு கூறுகிறார்:

> சகோதரரே, கோத்திரத் தலைவனாகிய தாவீதைக்குறித்து நான் உங்களுடனே தைரியமாய்ப் பேசுகிறதற்கு இடங்கொடுங்கள்; அவன் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டான்; அவனுடைய கல்லறை இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலிருக்கிறது. அவன் தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று தேவன் தனக்குச் சத்தியம்பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான் (அப் 2:29-31).

சங்கீதம் 16-ல் தன்னுடைய சொந்த கிறிஸ்தவக் கருத்துக்களைப் படிக்க பேதுரு உரிமை கோரவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக, தாவீதின் தீர்க்கதரிசன வார்த்தைகளை தாவீதின் அனுபவம் மற்றும் தாவீதின் நோக்கங்களின் வெளிச்சத்தில் அவர் விளக்கினார்.

அதைப் போலவே, அப்போஸ்தலனாகிய யோவானும் தீர்க்கதரிசனத்தின் அசல் அர்த்தம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார். யோவான் 12:39-40-ல் யோவான் ஏசாயா 6-ன் தீர்க்கதரிசனங்களைக் குறிப்பிடுகிறார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஏசாயா வேறு இடத்தில் சொல்கிறதைப் போல இங்கேயும் கூறுகிறார்: "அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்" (யோவா 12:39-40).

யோவான் ஏசாயாவிலிருந்து இந்த பகுதியை இயேசுவின் ஊழியத்தைக் குறிக்க பயன்படுத்தினார். ஆனால் அவர் தனது விளக்கத்தை சரிபார்த்த விதத்தைக் கவனிக்கவும். அடுத்த வசனமான யோவான் 12:41-ல், அவர் தீர்க்கதரிசியின் நோக்கங்களை முறையிட்டார்.

> ஏசாயா இயேசுவின் மகிமையைக் கண்டு அவரைப் பற்றிப் பேசியதால் இதைச் சொன்னார் (யோவான் 12:41).

யோவான் ஏசாயாவின் அனுபவத்திலும், அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு ஏசாயா எப்படி விரும்பினார் என்பதிலும் கவனம் செலுத்தினார். ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை யோவான் தனது சொந்த இலக்குகளுக்கு வசதியான விதத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக, தீர்க்கதரிசியின் இயற்கையான உந்துதல் நோக்கங்களுக்கு தன்னை அடிபணியச் செய்ய முயன்றார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களின் முன்மாதிரியைப் பின்பற்ற முற்பட வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன உரையை அதிகாரப்பூர்வமானதாகப் பார்ப்பது மட்டுமல்லாமல், அந்த தீர்க்கதரிசனங்களுக்குப் பின்னால் உள்ள அசல் அர்த்தத்தையும் நாம் கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும்.

## பிரயோகம்

இயேசுவுக்கும் புதிய ஏற்பாட்டை எழுதியவர்களுக்கும் தீர்க்கதரிசனத்தின் அசல் அர்த்தம் முக்கியமாக இருந்ததால், அவர்கள் அசல் அர்த்தத்தை மீண்டும் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, கிறிஸ்துவும் அவரைப் பின்பற்றுபவர்களும் தங்கள் காலத்தில் நடந்துகொண்டிருந்த தேவனுடைய வியத்தகு செயல்களுக்கு தீர்க்கதரிசன வார்த்தையைப் பயன்படுத்த உறுதிபூண்டிருந்தனர். இந்த பயன்பாட்டு செயல்முறை எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்க்க, நாம் இரண்டு யோசனைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும், அவையாவன: முதலாவதாக, தீர்க்கதரிசிகள் எதிர்காலத்தைப் பற்றி என்ன வகையான எதிர்பார்ப்புகளை முன்வைத்தனர்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்படியானால், புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இந்த எதிர்பார்ப்புகளின் நிறைவேற்றத்தை எப்படிக் கண்டார்கள்?

## தீர்க்கதரிசன எதிர்பார்ப்புகள்

இந்த பாடங்கள் முழுவதும் பழைய ஏற்பாடு எதிர்காலத்திற்காக கணித்த நம்பிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளின் வகைகளை விவரிப்போம், ஆனால் இப்போதைக்கு, புதிய ஏற்பாட்டு முன்னோக்குகளை நோக்கி ஒரு நோக்குநிலையை வழங்குவதற்காக பொதுவான சொற்களில் பேசுவோம். எளிமையாகச் சொல்வதானால், பாவம் உலகில் அழிவை ஏற்படுத்தியுள்ளது என்பதை தீர்க்கதரிசிகள் அறிந்திருந்தனர். தேவனுடைய ஜனங்கள்கூட மிகவும் சீர்கெட்டிருந்தார்கள், தேவன் அவர்களை வேறு தேசத்தில் சிறைப்படுத்தினார். ஆனால் பாவத்தின் இந்த பயங்கரமான விளைவுகள் இருந்தபோதிலும், தீர்க்கதரிசிகள் தேவன் விஷயங்களை சரிசெய்யும் ஒரு நேரத்தை எதிர்பார்த்தனர். இந்த எதிர்காலம் துன்மார்க்கர்களுக்கு எதிராக இறுதி நியாயத்தீர்ப்பாகவும் விசுவாசிகளுக்கு நித்திய ஆசீர்வாதமாகவும் இருக்கும். மனித வரலாற்றின் இந்த உச்சக்கட்டத்தை விவரிக்க தீர்க்கதரிசிகள் அனைத்து வகையான சொற்களையும் உபயோகப்படுத்தினர். ”கர்த்தருடைய நாள்” என்று அவர்கள் அதைப் பற்றிப் பேசினார்கள். ”கடைசி நாட்கள்” என்று அவர்கள் அதைப் பற்றிப் பேசினார்கள். இந்த மகத்தான எதிர்காலம் தேவன் உலகில் தலையிட்டு எல்லாவற்றையும் அவற்றின் இறுதி முடிவுக்குக் கொண்டு வந்த காலமாக இருக்கும்.

## தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள்

இப்போது, இந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எதிர்பார்ப்புகளைக் கையாள புதிய ஏற்பாட்டில் சிறப்பு வழிகள் இருந்தன. கிறிஸ்துவில் இந்த நம்பிக்கைகள் அனைத்தும் நிறைவேறுவதை அவர்கள் எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் நாட்களில், பல இஸ்ரவேலர்கள் தண்டனை நாள் மிக விரைவில் வரும் என்று எதிர்பார்த்தனர். மனித வரலாற்றை உச்சக்கட்டத்திற்குக் கொண்டு வரும் மேசியாவுக்காக அவர்கள் ஏங்கினார்கள். ஒரே வார்த்தையில் கூறுவதானால், கிறிஸ்தவர்கள் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டனர், எனவே இந்த தீர்க்கதரிசன நம்பிக்கைகள் அனைத்தும் நிறைவேறின. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றிய கிறிஸ்தவ புரிதலுக்கான பாரம்பரிய மையமாக இயேசு மாறினார்.

தீர்க்கதரிசன புத்தகங்களின் வியாக்கியானம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று இயேசுவே வலியுறுத்தினார். எம்மாவுக்குச் செல்லும் பாதையில் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வியாக்கியானத்தின் முக்கியத்துவத்தை அவர் தனது சீஷர்களிடம் பேசும்போது வலியுறுத்தினார். லூக்கா 24:25-26-ல் இயேசு இவ்வாறு கூறினார்:

> அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே! கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா? (லூக்கா 24:25-26).

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக தம்மைப் பின்பற்றுவோர் தம்மைப் பார்ப்பார்கள் என்று இயேசு எதிர்பார்த்தார். எனவே, அடுத்த வசனமான லூக்கா 24:27 இதை நமக்குச் சொல்கிறது,

> மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக்கா 24:27).

லூக்கா எப்படிச் சொன்னார் என்பதைக் கவனியுங்கள் - *அவரைப்* பற்றி தீர்க்கதரிசிகள் சொன்ன எல்லா தீர்க்கதரிசனங்களையும் இயேசு விளக்கினார். எனவேதான் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தீர்க்கதரிசனத்தின் அசல் எதிர்பார்ப்புகளின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தினர். ஆனால் அவர்கள் இந்த தீர்க்கதரிசன எதிர்பார்ப்புகளையும் கிறிஸ்துவின் நபருடனும் வேலையுடனும் தொடர்புபடுத்தினர்.

முதலில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் நம்பிக்கையின் பாதையாகிய எதிர்பார்ப்பின் பாதையை அமைத்தனர். மகத்தான நியாயத்தீர்ப்பு மற்றும் ஆசீர்வாதத்தின் எதிர்காலம் வரப்போகிறது. இப்போது புதிய ஏற்பாடு அந்த பாதையை எடுத்து, அதன் எதிர்கால நிறைவேறுதலைக் கண்டுபிடித்து, கிறிஸ்துவின் முதல் வருகையிலும், அவரது ராஜ்யத்திலும், கிறிஸ்து மகிமையில் திரும்பும்போது உலகத்தின் முடிவிலும் நிறைவைக் காண்கிறது.

இந்தப் பாடங்களின் தொடரின் பிற்பகுதியில் நாம் காண்பது போல, கிறிஸ்து தனது ராஜ்யத்தின் இந்த மூன்று கட்டங்களில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பூர்த்தி செய்தார் என்று புதிய ஏற்பாடு விளக்குகிறது: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தனது ராஜ்யமாகிய பூலோக ஊழியத்தை ஆரம்பித்ததில் அவர் நிறைய சாதித்தார். திருச்சபையின் வரலாறு முழுவதும் தனது ராஜ்யத்தின் தொடர்ச்சியில் பழைய ஏற்பாட்டு எதிர்பார்ப்புகளை அவர் தொடர்ந்து நிறைவேற்றுகிறார். இறுதியில், கிறிஸ்து திரும்பி வந்து தனது ராஜ்யத்தின் நிறைவைக் கொண்டுவரும்போது எல்லா தீர்க்கதரிசனங்களையும் முழுமையாக நிறைவேற்றுவார். கிறிஸ்துவின் பணியின் இந்த மூன்று கட்டங்களும் புதிய ஏற்பாட்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எழுத்தாளர்களுக்கு ஒரு வியாக்கியான மாதிரியை வழங்கியது, மேலும் இந்த மாதிரியுடன், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் அனைத்து எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் அவர்கள் தங்கள் காலத்திற்குப் பயன்படுத்த முடிந்தது.

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் எதிர்பார்ப்புகளை எவ்வாறு எடுத்துக்கொள்வது என்பதையும், கிறிஸ்துவின் முதல் வருகை, அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சி மற்றும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் கற்றுக்கொள்ள வேண்டும்.

# முடிவுரை

இந்த அறிமுகப் பாடத்தில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றிய நமது முழு ஆய்வையும் வழிநடத்தும் நான்கு விஷயங்களைத் தொட்டுள்ளோம். வேதத்தின் இந்தப் பகுதியைப் பற்றிய நமது குழப்பத்தை மூன்று இன்றியமையாத வியாக்கியான கண்ணோட்டங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் நாம் சமாளிக்க வேண்டும்: ஒரு தீர்க்கதரிசியின் அனுபவத்தின் தன்மையைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும், மேலும் தீர்க்கதரிசனங்களின் அசல் அர்த்தத்தின் முக்கியத்துவத்தையும் நாம் மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும். பின்னர் தீர்க்கதரிசனம் குறித்த புதிய ஏற்பாட்டு முன்னோக்குகளை எவ்வாறு பின்பற்றுவது என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்து வரும் பாடங்களில், இந்த மூன்று இன்றியமையாத வியாக்கியான கண்ணோட்டங்களை நாம் இன்னும் ஆராயப் போகிறோம். முதலில், ஒரு தீர்க்கதரிசியின் அனுபவத்தைப் பார்ப்போம், பின்னர் மூல அர்த்தத்தின் முக்கியத்துவத்தைப் பார்க்கப் போகிறோம். இறுதியாக, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தை எவ்வாறு கையாண்டார்கள் என்பதை இன்னும் விரிவாக ஆராய்வோம். இந்த பல்வேறு தலைப்புகளைப் பார்க்கும்போது, சபையை மகிமைப்படுத்தும் மற்றும் நம் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரும் தீர்க்கதரிசனத்தின் கண்ணோட்டத்தைக் காண்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.